ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:

# ஸ்ரீ மதுரகவியாழ்வார் அருளிச் செய்த
# கண்ணிநுண்சிறுத்தாம்பு
# பத்தாம் பாசுர வ்யாக்யான ஸாரம்

நஞ்ஜீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னபாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்

http://www.acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமானுஜாய நம:
ஸ்ரீமத் அநந்தார்ய மஹாகுரவே நம:
ஸ்ரீமத் வரவரமுனயே நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்பு பத்தாம் பாசுர வ்யாக்யான சாரம்

நஞ்சீயர், நம்பிள்ளை அருளிச் செய்த
வ்யாக்யானத்திலிருந்து திரட்டியது

**பத்தாம் பாசுரம்:**

பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும்
செயல் நன்றாக திருத்திப் பணிகொள்வான்
குயில் நின்றார் பொழில்சூழ் குருகூர்நம்பி
முயல்கின்றேன் உந்தன் மொய்கழற்கன்பையே

**அர்த்தம்:**

பிறர் திருந்துவதால் தமக்கு ஒரு பயன் இல்லாமல் இருந்தாலும், அவர்கள் திருந்துவதற்குரிய குணமுடையவராய் இல்லாமல் போனாலும், தமது செயலால் அவர்களை நன்கு திருத்தி அவர்களை ஆட்கொள்பவராய் இருப்பவர், குயில்கள் ஆரவாரம் செய்யும் சோலைகள் சூழ்ந்த திருக்குருகூரில் இருக்கும் பூர்ணர். அப்படிப்பட்ட நம்மாழ்வாரின் சிறந்த திருவடிகளில் அன்பு செய்ய முயற்சித்து நிற்கிறேன்.

**வ்யாக்யான சாரம்:**

நம்மாழ்வார் தமக்கு செய்த உபகாரத்தை எண்ணி, அதன் முன்னால் அவரிடம் தாம் செய்த பக்தி ஒன்றுமே இல்லை எனத் தோன்றி, அதனால் அவருடைய திருவடிகளில் தாம் அப்போதே அன்பு செய்யத் தொடங்குகிறேன் என்கிறார். நம்மாழ்வாருடைய உபகாரத்தின் முன்னால் தான் எது செய்தாலும் போதாது என்று அதைப் பேசுகிறார். ஆசார்யன் விஷயத்தில் எது செய்தாலும் போதாது ("க்ருதஸ்நாம் வா ப்ருதிவீம் ததான்ன தத்துல்யம் கதஞ்சன"). அவர் தமக்கு எம்பெருமானையே தந்திருக்கும் போது தாமும் அதற்க்கீடாக எம்பெருமானையே அளிக்க வேண்டியதால், அது முடியாமல், வேறு எது செய்தாலும் குறையாகவே போகும் என்ற நிலையில் நிற்கிறார்.

**பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும்:**
ஒன்றைப் பெற தகுதி, முறை இல்லாதவர்களையும்; அவனைப் பற்றாமல் இருப்பதால் கைவிடத் தகுதியாய் இருப்பவர்களையும்.

**பயனன்றாகிலும்:**
ஒரு உபகாரத்தை ஒருவன் மற்றொருவனுக்கு செய்வது தனக்கு அதில் ஒரு பயன் ஒன்று உண்டு என்பதாலேயே. அப்படி ஒரு பயனும் தமக்கு இல்லாமல் இருக்கையிலும் நம்மாழ்வார் உபகரித்தார்.

**பாங்கல்லராகிலும்:**
பயன் இல்லாவிட்டாலும் சொல்லுகிற விஷயத்தை கேட்க பாங்கு உடையவராய்க் கூட இல்லாமை. அப்படிப்பட்டவர்களுக்கு ஏன் நம்மாழ்வார் சொல்லுகிறார் என்றால், ராவணனுக்கும் உபதேசிக்கும் பிராட்டியைப் போல ("மித்ரமௌபயிகம் கர்த்ரும்"), அவர்கள் துர்நிலையைக் காணப் பொறுக்காமல் சொல்லுகிறார். ஒருவனுடைய வீட்டின் இருபுறமும் அடைத்துக் கிடக்க அவ்வீடு பற்றி எரிந்தால் அதை அணைவிக்க முயல்வார்போலே இருப்பது நம்மாழ்வார் நிலை.

**செயல் நன்றாக:**
தாம் நின்ற நிலையிலேயே பாங்கு இல்லாதவர்களையும் திருத்திக் கொள்வது நம்மாழ்வாருடைய க்ருபையாகும் என்கிறார். அவனைப் போல் ஒருவருடைய திறம் பார்த்து அருள் புரியாமல் தாம் இருக்கும் நிலையிலேயே அருள் செய்வதே நம்மாழ்வாருடைய கருணை. தம்முடைய செயலாலே எல்லாம் நன்று ஆக்கினார். எம்பெருமான் செயலாலே இவர் எல்லாம் நன்று ஆக்கினார்.

**திருத்திப் பணி கொள்வான்:**
தன்னையே பற்றி இருக்கும் அடியவர்களைக் காக்கும் எம்பெருமானைப் ("தீர்ந்த அடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்ளவல்ல") போல் அல்லாமல், தம்மை அண்டி இருப்பவர்கள், அண்டாமல் இருப்பவர்கள் அனைவரையும் திருத்திப் பணி கொள்பவர் நம்மாழ்வார்.

**குயில் நின்றார் பொழில்சூழ் குருகூர்:**
நம்மாழ்வாரைக் கிட்டினால் இவ்விடத்திலேயே ஆனந்தம் பெறலாம் என்கிறார். அவனை அடைவதற்கு நலமந்தமிலாததோர் நாட்டுக்குச் செல்ல வேண்டும் ("ஏதஸ்ஸாம காயந்நாஸ்தே"). அது முக்தர்களுக்கும் நித்யர்களுக்கும் மட்டுமே உரியது. முமுக்ஷுக்களுக்கு கிடைக்கும் இடம் இவ்விடமே (திருக்குருகூர்). நம்மாழ்வாருடைய பூர்த்தியின் எல்லையாவது, எம்பெருமானோடும் நித்யரோடும் முக்தரோடும் வித்யாசமின்றி ஆனந்தத்தைத் தருவது. நம்மாழ்வார் தம்முடைய

ஆற்றாமையினாலும் களிப்பாலும் குயிலை அழைக்க ("காண வாராய்", "யாவர் நிகரகல்வானத்தே"), அக்குயிலுகளும் அவர் பாசுரங்களைக் கேட்டு கேட்டு அதையே சொல்கின்றன.

**குருகூர் நம்பி:**
சேதனர் ("ஊரும் நாடும் உலகமும் தன்னைப் போல்") மட்டுமன்றி எல்லா திக்குகளிலும் எல்லோரும் எல்லாமும் உய்யும்படி இருப்பது நம்மாழ்வாருடைய பூர்த்தி.

**முயல்கின்றேன் உந்தன் மொய்கழற்கன்பையே:**
நம்மாழ்வாருடைய திருவடிகளில் அன்பு செய்வதற்காக பணிந்து நிற்கின்றேன் என்கிறார். நம்மாழ்வாருடைய திருவடிகளில் அன்பை செய்ய முயன்று நிற்கிறார். நம்மாழ்வாரின் உபகாரத்தைக் கண்டு ("என்னைத் தீமனம் கெடுத்தாய் உனக்கென் செய்கேன்") அதற்கு ப்ரதி உபகாரமாக அவர் திருவடிகளில் தாம் ஒன்றும் செய்ய இயலாமல் தடுமாறி நிற்கிறார்.

**மதுரகவி ஆழ்வார் திருவடிகளே சரணம்**
**நஞ்சீயர் நம்பிள்ளை திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

அடியேன் மதுரகவி தாசன்
திருமலை குன்னப்பாக்கம் அனந்தாண்பிள்ளை வேங்கடார்யன்